# சங்கடங்கள் தீர்க்கும் இந்துார் கஜரானா மஹா கணபதி

சாந்திப்பிரியா

*(ஓம் சரவணபவ,* நவம்பர், 2005 இதழில் வெளியான இந்த கட்டுரையின் விரிவாக்கப்பட்ட மறு பதிப்பு இது *)*





கஜரானா ஆலயத்தில் உள்ள கணபதியின் அலங்கரிக்கப்பட்ட பல ரூபங்கள்

**ஆலயம் செல்லும் வழி:** இந்துார் நகரத்திற்குச் சென்றால் ரெயில் நிலையத்தில் இருந்தும், பஸ் நிலயத்தில் இருந்தும் சுமார் இரண்டு அல்லது மூன்று கிலோ தொலைவில் நகரத்துக்கு உள்ளேயே உள்ள கஜரானா கணபதி ஆலயத்திற்கு நேரடியாக சென்று வர டெம்போ, ஆட்டோ மற்றும் பஸ்கள் நிறைய கிடைக்கின்றன.

## ஆலயம் உள்ள நகரம்

மத்தியப் பிரதேசத்தில் உள்ள நகரங்களில் மிகவும் முக்கியமானது இந்துார் நகரம். அங்கு பழைய காலத்தில் கட்டப்பட்ட சிறப்பான பல ஆலயங்கள் உண்டு. இந்துார் நகரம் முன்பு மால்வா மன்னர்களினால் ஆளப்பட்டது. அந்த மன்னர்கள் கடவுள் பக்தி மிகுந்தவர்கள். மராடா வம்சத்தினர். அந்த வம்சத்தில் ஆட்சி செய்தவர்களில் மிகவும் முக்கியமானவர்கள் தேவி அஹில்யா குடும்பத்தினர். அவர்கள் ஆண்டு கொண்டு இருந்த பொழுது இந்துார், உஜ்ஜயினி மற்றும் தேவாஸ் போன்ற இடங்கள் அவர்களது ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. அவர் பல ஆலயங்களை நிறுவி உள்ளார். பெரும் பக்திமான். ஓம்காரீஷ்வருக்குப் போகும் பாதையில் வரும் மண்டலீஷ்வர் என்ற ஊரில் அவர் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வித விதமான சிறியதும், பெரியதுமான சிவலிங்கங்களை ஒரு ஆலயத்தில் வைத்து வணங்கி வந்தார். இன்றைக்கும் அந்த ஆலயம் உள்ளது. இராணி

அஹில்யா தேவி இந்துார் மக்களினால் மிகவும் போற்றப்படுகின்றார். அவருடைய சபையில் எந்த ஒரு முக்கியமான முடிவெடுக்கும் நேரத்திலும், எந்த ஒரு தீர்ப்பை வழங்கும் பொழுதும் ஒரு சிறிய சிவலிங்கத்தை தன்னுடைய கையில் வைத்துக் கொண்டு இருப்பாா என்று அவருடைய சிறப்பைப் பற்றிக் கூறுவார்கள்.

## ஆலயம் எழுந்த கதை

சுமார் முன்னூறு வருடங்களுக்கு முன்பு பெருமை வாய்ந்த அஹில்யா இராணியின் கனவில் ஒரு முறை வினாயகர் தோன்றி தான் இந்துாரில் கஜரானா பகுதியில் உள்ள ஒரு குளத்தில் மூழ்கிக் கிடப்பதாகவும், தன்னை வெளியில் எடுத்து ஒரு ஆலயம் அமைத்து வழிபடுமாறு கூறினாராம். குஜரானா என்ற பகுதி இந்துாரில் மிகவும் நெரிச்சல் மிக்க பகுதியாக இருக்க என்ன செய்வது என முதலில் குழம்பியவள், தன்னுடைய கனவு பற்றி மற்றவர்களுடன் கலந்து ஆலோசித்தப் பின் வினாயகர் கொடுத்தக் கட்டளையை மீறக் கூடாதென முடிவெடுத்து கஜரானாவில் இருந்த ஒரு குளத்தை சுத்தம் செய்து துார் வாரச் செய்தார். அப்படி செய்கையில் அந்த குளத்தினுள் புதைந்து இருந்த வினாயகர் விக்ரகம் கிடைத்தது. என்ன ஆச்சரியம். அந்த பிள்ளையாரும் அவருடைய கனவிலே தோன்றிய வினாயகரும் ஒரே மாதிரி இருந்தனர். உடனே அந்த விக்ரகத்தை சுத்தம் செய்து அந்த குளத்தின் எதிரிலேயே அகம முறைப்படி ஆலயம் ஒன்றை எழுப்பி, விக்ரகத்தைப் பிரதிஷ்டை செய்து 1735 ஆம் ஆண்டு அந்த ஆலயத்தில் பூஜைகளைத் துவக்கினாராம்.

## ஆலய மகிமை

சுமார் ஆறு அடி உயரமுள்ள வினாயகரின் சிலைக்கு இரு பக்கத்திலும் இரண்டு மனைவிகளை வடிவமைத்து உள்ளனர். அந்த ஆலயத்தில் ஏழு அல்லது எட்டுத் தலைமுறையாக பூஜைகளை செய்து வரும் பண்டிதர் அதன் பெருமையை மனம் மகிழ்ந்து கூறினார். பண்டிகை தினங்களிலும், புதன் கிழமைகளிலும் நடு இரவுவரை நீண்ட வரிசையில் மக்கள் நின்றிருந்து வினாயகரின் அருகில் சென்று அவரை வணங்கி வேண்டுதல்கள் செய்கின்றனர். குடும்பத்தில் அமைதியின்மை, தடை பெற்றுவரும் காரியங்கள் சித்தி பெற, குடும்பச் சண்டை போன்றவற்றிக்கு நிவாரணம் பெற என பல்வேறு கோரிக்கைகளை வைத்து வேண்டுதல் செய்கின்றனர். வினாயகரை வேண்டிக் கொண்டு அந்த ஆலத்தில் உள்ள ஒரு மரத்தில் நோம்புக் கயிற்றைக் கட்டி வைத்துவிட்டு ஒரு தேங்காயை பூசாரியிடம் தந்து விட்டு வேண்டுதல்களை அவரிடம் கூறிவிட்டுச் செல்கின்றனர். அதை அவர் ஸ்வாமி பீடத்தில் வைத்து விடுகின்றார். எப்பொழுது தன் வேண்டுதல் பலிக்கின்றதோ அப்பொழுது அவர் அந்த ஆலயத்திற்குச் சென்று பூசாரியிடம்

அதைப் பற்றிக் கூற அவர் பீடத்தில் இருந்து ஒரு தேங்காயை பிரசாதமாகத் தருகிறார்.

ஆந்த ஆலயத்திற்கு செல்லும் பல பக்தர்கள் கூறும் கதைகள் மெய சிலிர்க்க வைக்கின்றன. ஒரு முறை ஒருவருடைய வீட்டில் பல லட்சம் மதிப்புள்ள பணமும் நகைகளும் திருட்டுப் போய் விட்ன. திருடனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அவர்கள் ஜோதிடரிடம் சென்று கேட்ட பொழுது அவர்களும் ஒரு குறிப்பிட்ட காலத்தைக் கூறி அதற்குள் அவனைப் பிடிக்காவிடில் அதன் பிறகு அந்த திருடனை பிடிக்கவே முடியாது, அவன் பிடிக்க முடியாத இடத்திற்கு சென்று விடுவான் எனக் கூறி விட்டனர். அவர்கள் கொடுத்திருந்த கெடுவும் முடிந்தது, திருடனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. மாதங்கள் ஓடிவிட்டன. மனம் வெறுத்துப் போன அந்த வீட்டினரிடம் எதேற்சையாக ஒருவர் நீங்கள் கஜரானா ஆலயம் சென்று அங்கு வேண்டிக் கொள்ளுங்கள் , அவர் நிச்சயமாக வேண்டுதலை நிறைவேற்றுவார் எனக் கூறி அவர்களை ஆலயத்திற்கு தாமே அழைத்துச் சென்றனர். அந்த தம்பதியினரும் அங்கு சென்று வேண்டிக் கொண்டு திரும்பினர். என்ன அதிசயம், அதற்கு அடுத்த சில நாட்களிலேயே வெளியூருக்குத் தப்பி ஓடி விட்டிருந்த அதே திருடன் மீண்டும், முதலில் திருடியவருடைய வீட்டை ஒட்டியபடி பின்னால் இருந்த வீட்டில் திருட வந்தான். சொன்னால் நம்ப முடியாது, எதிர்பாராத விதத்தில் அவன் வீதியில் விளையாடிக் கொண்டு இருந்த சிறு பையன்களினால் மாட்டிக் கொண்டான். களவு போனதில் பத்து சதவிகித தொகைக்குக் கூட திரும்பக் கிடைக்கவில்லை என்றாலும், அவர்கள் மிகவும் போற்றி வைத்திருந்த முக்கியமான ஒரு பொருள் கிடைத்தது. பிடிக்க முடியாதென ஜோதிடர் முதல் காவல்துறையினர்வரை கூறியும் பல மாதங்களுக்குப் பின் அதே திருடன் கிடைத்தான். அதை என்னவென்று சொல்வது? இப்படி பல பல சம்பவங்களைக் கூறுகின்றனர். பிளவு பட்ட குடும்பம் ஒன்றானது, பிழைப்பது சாத்தியம் இல்லை என கைவிடப்பட்டவர் அறுவை சிகிச்சை செய்து கொண்ட பின் அந்த காயம்கூடத் தெரியவில்லை, வருடக் கணக்கில் தேங்கிக் கிடந்த வழக்கினால் மன அமைதியை இழந்தவர் ஆலயத்தில் சென்று வேண்டிக் கொண்ட அடுத்த சில நாட்களில் வழக்கு மீண்டும் எடுக்கப்பட்டு அவருக்கு சாதகமாக முடிந்தது. இப்படி பல பல கதைகள் உண்டு. இந்தூர் செல்பவர்கள் அவசியம் காண வேண்டிய ஆலயம் கஜரானா கணபதி ஆலயம்.